/மிக மிக அவசரம்/

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந.க.எண். 295/அ1/2026 நாள். .01.2026

பொருள் : பள்ளிக் கல்வி –அமைச்சுப்பணி–வேலூர் மாவட்டம்– இளநிலை உதவியாளர்/தட்டச்சர்/சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3 ஆகியோருக்கான விருப்ப மாறுதல் கலந்தாய்வு இணைய வழியில் (Google Meet) நடத்துதல் – பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் பெயர்ப் பட்டியல் தயார் செய்யப்பட்டது –சேர்க்கை, நீக்கம் மற்றும் திருத்தம் –விவரங்கள் சார்பாக அனுப்ப கோருதல்– சார்ந்து.

பார்வை : தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின்(பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.1847/அ4/இ1/2026 நாள்.21.01.2026

பார்வையில் காணும் செயல்முறை கடிதத்திற்கிணங்க இளநிலை உதவியாளர்/தட்டச்சர்/சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3 ஆகியோருக்கான விருப்ப மாறுதல் கலந்தாய்வு இணைய வழியில் (Google Meet) நடத்தப்பட உள்ளதால் பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் பெயர்ப் பட்டியல் தயார் செய்யப்பட்டது சேர்க்கை, நீக்கம் மற்றும் திருத்தம் சார்பான விவரங்களை அனுப்ப வேண்டியுள்ளது. மேலும் பள்ளிக் கல்வி இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறை கடிதத்தில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி, தற்போது பணிபுரியும் பணியாளர்களில் ஓராண்டு பணி முடித்தவர்களின் எவரேனும் தற்போது மாறுதல் கோரி விண்ணப்பிக்க விரும்பினால் இத்துடன் இணைக்கப்பட்ட விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து உரிய அலுவலரின் பரிந்துரை பெற்று 22.1.2026 இன்று மாலை 5.00மணிக்குள் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்குமாறு சார்ந்த அலுவலர்கள் மற்றும் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

மேலும், 22.1.2026. இன்று மாலை 5.00மணிக்குள் விண்ணப்பம் பெறப்படவில்லையெனில் இன்மை அறிக்கை பெறப்பட்டதாக கருதி பள்ளிக் கல்வி இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி) அவர்களுக்கு தொகுப்பறிக்கை அனுப்பி வைக்கப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. இதன்பின்னர் வரப்படும் விண்ணப்பம் பரிசீலிக்கப்படமாட்டாது என அனைத்து அலுவலர்கள் மற்றும் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

இணைப்பு:–
செயல்முறை கடிதம்

22.01.26

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

21.1.2026

பெறுநர்,

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்(இடைநிலை, தொடக்கக் கல்வி, தனியார் பள்ளிகள்),வேலூர் மாவட்டம்.
2. முதன்மைக் கல்வி அலுவலர்/ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி , வேலூர் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
3. அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்